## **பொதுக்காலத்தின் முப்பத்துமூன்றாம் ஞாயிறு**

## **திருவழிபாடு ஆண்டு - A**

## **2023-11-19**

*(இன்றைய வாசகங்கள்:*

*நீதிமொழிகள் நூலிலிருந்து வாசகம்* 31: 10-13, 19-20, 30-31,

*திருப்பாடல்* 128: 1-2. 3. 4-5 ,

*திருத்தூதர் பவுல் தெசலோனிக்கருக்கு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம்* 5: 1-6,

*மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்* 25: 14-30)

*திருப்பலி முன்னுரை*

*நம்பிக்கைக்குரியவர்களே, பொதுக்காலத்தின் முப்பத்துமூன்றாம் ஞாயிறு திருப்பலிக்கு உங்களை அன்புடன் வரவேற்கிறோம். நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்புகளை சரியாக நிறைவேற்ற இன்றைய திருவழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கிறது. கடவுள் நமக்கு வழங்கிய ஒவ்வொரு பணியையும் எப்படி நிறைவேற்றினோம் என்பதற்கு நாம் கணக்கு கொடுக்க வேண்டும் என ஆண்டவர் இயேசு நினைவூட்டுகிறார். ஆண்டவரின் திட்டத்திற்கு ஏற்ப நம் வாழ்க்கை அமைந்துள்ளதா என்பதை சீர்தூக்கி பார்க்க நம்மை அழைக்கிறார். ஆண்டவரிடம் பரிசு பெறும் வகையில் விழிப்புடன் செயல்பட வரம் கேட்டு, இத்திருப்பலியில் பக்தியுடன் பங்கேற்போம்.*

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

*விண்ணகத் தந்தையே இறைவா,*

*திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும், தங்களிடம் ஒப்படைக்கப் பெற்ற பொறுப்புகளில் திறம்பட செயலாற்றி, இவ்வுலகில் இறையாட்சியை நிறுவ உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.*

*நலம் அருள்பவரே இறைவா,*

*சோம்பல், ஆர்வமின்மை போன்ற காரணங்களால் நீர் வழங்கிய திறமைகளை சரியாக பயன்படுத்தாமல் வாழும் அனைவரும், மனந்திரும்பி பொறுப்புடன் செயல்பட உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.*

*குணம் அளிப்பவரே இறைவா,*

*உலக நாட்டங்களாலும், உடல் இச்சைகளாலும் பாவத்தில் உழலும் மக்கள் அனைவரும், உமது இரக்கத்தால் மனந்திரும்பி, ஞானத்தோடு உம்மை எதிர்கொள்ள அருள் புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

*அளவற்ற அன்புக்கு அடித்தளமான இறைவா!*

*யாரும் நினையாத உத்தரிக்கிற ஸ்தலத்தில் இருக்கின்ற ஆன்மாக்கள் அனைவரையும் உம் பாதத்தில் அர்ப்பணிக்கின்றோம். அவர்கள் அனைவரையும் விரைவாக உம் இல்லத்தில் அழைத்து, பரிசுத்தர்கள் கூட்டத்தில் சேர்த்து, உம்மைப் போற்றி புகழ வரம் அருள வேண்டுமென்று இறைவா உம்மை*

*மன்றாடுகிறோம்.*

*அமைதியின் இறைவா!*

*இன்றைய காலகட்டத்தில் உலகெங்கும் நிலவும் போர்காலப் பதட்டை தவிர்த்திடும். மக்கள் ஒரே குடும்பமாக இவ்வுலகில் வாழ்ந்திட, அன்பும் சகோதரத்துவமும் நிறைந்த வாழ்வு வாழ, உலகநாட்டு தலைவர்களை வழிநடத்தி தேவையான அருள் வரங்களைப் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

*அன்பினால் அனைவரையும் ஒன்றிணைத்த எம் அருள் நாதா!*

*எங்கள் குடும்பங்களில் உமது மதிப்பீகளை அறிந்துக் கடவுளின் பார்வையில் மாசற்றச் சமயவாழ்வு வாழவும், நாங்கள் ஒவ்வொருவரும் எங்கள் நிலைக்கு ஏற்பச் செயல்பட அழைக்கப்பட்டுள்ளோம் என்பதை உணர்ந்து, உலகத்தால் கறைபடாதபடி எம்மைக் காத்துக் கொள்ள வேண்டிய வரங்களை அருள இறைவா உம்மிடம் மன்றாடுகிறோம்...*

*பரிவுடன் எங்களை அரவணைக்கும் தந்தையே எம்இறைவா!*

*இவ்வலகைவிட்டுப் பிரிந்துச் சென்ற உம் அடியார்கள் அனைவரையும் நினைவுகூர்கிறோம். அனைவரும் உமது பேரின்பவீட்டில் சேர்த்துக்கொள்ளும். குறிப்பாக யாரும் நினையாத குருக்கள், இருபால்துறவியர்கள் அனைவரையும் தாவீது கூறியதுபோல உம் தூயகத்தில் தங்கிட அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

*என்றென்றும் இரக்கமுள்ள அன்பு தெய்வமே இறைவா!*

*இன்றைய காலகட்டத்தில் இச்சமுகத்தில் எங்கள் குடும்பத்தினர்கள் எதிர் கொள்ளும் சோதனைகளிலும், வேதனைகளிலும் சோர்ந்து போகாமல் விழிப்புடனிருந்து வெற்றிக் கொள்ளவும், தங்கள் விசுவாசத்தைக் காத்துக்கொள்ளவும் தேவையான ஞானத்தையும் முன்மதியும் அருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*